Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | பிலவ | மாசி 27 ஆம் நாள் | ஷவ்வால் 3 | (10 3-62) | சனிக்கிழமை | இதழ் 28

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

யாழ்ப்பாணம் மாநகர சபை

# வீட்டு வரி மதிப்பீட்டை குறைக்க தீர்மானம்

## ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள்?

யாழ்ப்பாணம், சனி

மாநகரசபைக் கூட்டம் நேற்றுமாலை 4 மணிக்கு மேயர் திரு. எம் ஜேக்கப் தலைமையில் ஆரம்பமானது. சுமார் 2 மணித்தியாலமாக நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்த பல பிரேரணைகள் நிதிக்கமிட்டியின் சிபார்சுகள் ஆகியனவற்றைச் சபை எதுவித பரபரப்புமின்றி விவாதித்து முடிவு செய்து கொண்டிருந்தது.

நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்த அங்கத்தவர்களின் பிரேரணைகள் சபையில் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 3 நிகழ்ச்சிகள் இருக்கக்கூடியதாக திரு. தேவபாலசுந்தரமும் திரு. பி எம். ஜோனும் சபையின் அனுமதியைக் கோரி, "யாழ்ப்பாண மாநகரசபையில் ஊழியர்களை நியமிப்பதும், நீக்குவதும், மாற்றுவதும் சபையின் அனுமதியைப் பெற்றே செயல்படவேண்டும். பெப்ரவரி 19ம் திகதி தொடக்கம் இதுவரை செய்த மாற்றங்கள் எல்லாம் ரத்துச்செய்யப்பட்டு முன்னிருந்த நிலையில் இருக்கவேண்டும். சபையின் நலனைக் கருதி மாற்றங்கள் செய்யப்படின், சபையின் அனுமதி பெற்றே இவ்வித மாற்றங்கள் செய்யவேண்டும்" என்னும்

(8ம் பக்கம் பார்க்க)

## வீட்டு வரி $33\frac{1}{3}$ வீதத்திற்கு மேற்படக் கூடாது

யாழ்ப்பாணம், சனி

வீட்டு வரி மதிப்புக்காக இப்போது செய்யப்பட்டுள்ள புது மதிப்பு, சில வருடங்களுக்குமுன் செய்யப்பட்ட மதிப்பைவிட மிக மிக அதிகமாக ஏற்பட்டிருப்பதால் இப் புது மதிப்பு மக்களுக்கு தாங்குதற்குரிய பெருங் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே எந்தக் கட்டத்தின் புது மதிப்பும் சென்ற மதிப்பிலிருந்து $33\frac{1}{3}$ சத வீதத்திற்கு அதிகமாய் மேற்படாமல் இருக்கத்தக்கதாக மாநகரசபைமுதல்வர் நடவடிக்கையெடுக்கவேண்டும் என்று திரு. பி. எஸ். சோமசுந்தரத்தினல் கொண்டுவரப்பட்ட பிரேரணை மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மாலை யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டம் மேயர் திரு. எம். ஜேக்கப் தலைமையில் நடைபெற்றது.

திரு. ஏ. துரைராசசிங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பிரேரணையை நிதிக் கமிட்டியின் ஆலோசனைக்கு விடுவதென முடிவுசெய்யப்பட்டது.

"யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்குப் பணம் இல்லாத காரணத்தால்" பள்ளிக்கூடப் படிப்பை இடையில் நிறுத்தவேண்டிய இக்கட்டான நிலைமையில் இருக்கிறார்கள். இதனல் அவர்கள் தங்கள் வருங்கால விருத்தியை இழக்கவேண்டியிருக்கிறது. எனவே பள்ளிக்கூடங்களில் உள்ள தலைமை ஆசிரியர்கள் வட்டார மாநகரசபை அங்கத்தவர்களுடைய சிபார்சின்பேரில் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை மாநகரசபைமூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்."

## 'ஈழநாடு' தமிழ் நாடக விழா

தமிழ்நாடகத்துறையின் வளர்ச்சிக்காக 'ஈழநாடு', தமிழ் நாடகவிழாவை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. சிறந்த நாடகங்களுக்கும், கலைஞர்களுக்கும் பல அரிய பரிசுகளை வழங்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஐந்து நாட்களுக்கு நடைபெறும் நாடகவிழா பற்றிய முழு விபரங்களுக்கும் (நாளைய) 'ஈழநாடு' ஞாயிறு இதழைப் பார்க்கத் தவருதீர்கள்.

## மேயருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபையின் 3-ம் வட்டார பிரதிநிதியும், புதிய மேயருமான திரு. எம். ஜேக்கப்பைக் கௌரவிக்கு முகமாக மூன்றும் வட்டார மக்களின் சார்பாக வருகிற 11-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப்படும். டாக்டர் எஸ. சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

## திரு. நரசிம்மன் இலங்கை வருகிறார்

கொழும்பு, வெள்ளி

ஐ. நா. பொதுச்சபையின் உதவிக் காரியதரிசி திரு. சக்கரவர்த்தி நரசிம்மன் இம்மாதம் 20-ம் திகதி இலங்கைக்கு விஜயம்செய்ய விருக்கிறார்.

இன்று நியூயோர்க்கிலிருந்து புறப்பட்டுள்ள திரு. நரசிமமன் இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மலாயா ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்வார்.

திரு. நரசிம்மன் இந்த நாடுகளின் அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு ஐ. நா. ஸ்தாபனத்துக்கு மேலும் ஆதரவு தேடுவதற்காகவே இந்த நாடுகளுக்கு விஜயம் செய்கிறார் எனத் தெரிகிறது.

ஐ. நா. ஸ்தாபனத்தில் தற்பொழுது உயர் பதவி வகிக்கும் இந்தியர் இவரே.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

திவ்விய ஜீவனசங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை இன்று ஸ்ரீ பரமஹம்சரின் 127வது ஜயந்தி தினத்தை வைமன் வீதியிலுள்ள 3ம் நம்பர் கட்டடத்தில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

பேராசிரியர் நாவி "சமயங்களின்ஒருமைப்பாடு" என்னும் விஷயம் பற்றிப் பேசுவார். பரமஹம்ஸரின் வாழ்க்கை வரலாறு பற்றிச் செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசுவார்.

திருமதி கே. வி. நடராசா வழமையாக நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையை நடத்துவார்.

## ரொடீஷிய பிரதமர் ராஜிநாமா!

டுனிஸ், மார்ச். 9

ரொடீஷிய சம்மேளனத்தின் பிரதமர் சேர் ராய் வெலன்ஸ்கி இன்று ராஜிநாமாச் செய்துள்ளார்.

ரொடீஷிய சம்மேளனத்தின் பெடரல் பார்லிமெண்டைக் கலைத்துப் புதியதேர்தல் நடத்துவதற்காகவே சேர். ராய் வெலன்ஸ்கி ராஜிநாமாச் செய்துள்ளார்.

## படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டம்

### அ. இ. விவசாய முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

சுமார் மூவாயிரம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ஒரு திட்டமொன்றை அகில இலங்கை விவசாய முன்னேற்றக் கழகம் தயாரித்துள்ளது.

இவ்வித திட்டமொன்று பற்றி அகில இலங்கை விவசாய முன்னேற்றக் கழகம் தனது நிர்வாகசபைக் கூட்டத்தில் ஆராய்ந்துள்ளது.

கழகம் இரணைமடுக் குளத்தின் இடதுகரைப் பகுதியில் இருக்கும் மேட்டு நிலத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மிளகாய்ச் செய்கையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் இதனைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் கடன் கோருமுன்னர் வடகிழக்கு மாகாண எம். பி.க்கள் உட்பட சகல தலைவர்களையும் கொண்ட ஓர் மகாநாட்டை இம்மாத இறுதியில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடத்தவிருக்கின்றது.

## ஷோம்பேக்கு அடுலாவின் அழைப்பு

### கடாங்கா பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கே

லியப்போல்ட்வில்லி, மார்ச் 9

கடாங்கா பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காக திரு. ஷோம்பேயை காங்கோ பிரதமர் திரு. அடுலா லியப்போல்ட்வில்லிக்கு அழைத்துள்ளார்.

திரு. ஷோம்பே இந்த அழைப்பைக் கொள்கையளவில் ஏற்றுள்ளார். திரு ஷோம்பே லியப்போல்ட்வில்லியில் தங்கியிருக்கும் காலத்தில் அவருக்கு சகல பாதுகாப்புக்களும் அளிக்கப்படுமென்றும் அவருக்கு நடமாட்ட சுதந்திரம் அளிக்கப்படுமென்றும் திரு அடுலா திரு. ஷோம்பேக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## விஞ்ஞானதொழில்கலாசார உறவு உடன்படிக்கை

### அமெரிக்கா – ரஷ்யா கைச்சாத்திட்டன

வாஷிங்டன், மார்ச் 9

விஞ்ஞான தொழில், கல்வி, கலாசார உறவுகளை அமெரிக்கா ரஷ்யா ஆகிய இரு நாடுகளிடையேயும் பரிவர்த்தனை செய்துகொள்ளும் வகையில் ஒரு உடன்படிக்கை ஒன்று வாஷிங்டனில் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தவர்கள் ரஷ்யாவுக்கும் ரஷ்ய அதிகாரிகள் அமெரிக்காவுக்கும் செல்ல வழிசெய்யும். 1962-63ம் வருடத்துக்கான இந்த உடன்படிக்கை ரஷ்யாவிலுள்ள விஞ்ஞானிகள், தொழில் நிபுணர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியார் அமெரிக்காவிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்கள்பற்றி அறிந்துகொள்ளவும் அமெரிக்காவிலுள்ள அறிஞர்கள் ரஷ்யாவிலுள்ளவர்களுடன் தொடர்புகொண்டு கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும் வழி அமைக்கும்.

திரைப்படம் டெலிவிஷன் முதலியவையும் இரு நாடுகளிடையேயும் கல்வி கலாசார விஞ்ஞானத்தொடர்புகளை அதிகரிக்கப்பயன்படுத்தப்படும்.

## ரோயல் – தோமியன் கிரிக்கட்

கொழும்பு, வெள்ளி

இன்று ஓவல்மைதானத்தில் ரோயல் கல்லூரிக்கும் தோமஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட்போட்டியில் தோமஸ்கல்லூரி முதல் இன்னிங்ஸில் 197 ரன்கள் எடுத்தது. ரோயல் கல்லூரி 2 விக்கட் நஷ்டத்துக்கு 78 ரன்கள் பெற்றது.

தோமஸ்கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய செல்லத்துரை 68 ரன்களை எடுத்தும் ஆட்டத்தை இழக்காதிருந்தார். பந்தெறிந்த விவெர்ட்டும், ஆர். வி. டி. சில்வாவும் தலைக்கு 3 விக்கட்டுகளை எடுத்தனர். ராஜரத்தினம் 2 விக்கட்டுகளை எடுத்தார்.

ரோயல் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய எஸ். எஸ். குமாரும் ஜெயரத்தினவும் 78 ரன்கள் எடுத்தனர்.

தோமஸ் கல்லூரி முதல் 90 நிமிஷங்களில் 50 ரன்கள் எடுத்தது. ரோயல் கல்லூரி முதல் 65 நிமிஷங்களில் 50 ரன்கள் எடுத்தது.

# இம்மாதம் 2ம் தேதிதான் உண்மை சுதந்திரம் கிடைத்தது

## ஒலிபரப்பு டைரக்டர் பேச்சு

ஹொரணை, வெள்ளி

"பதினுன்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை சுதந்திரமடைந்த போதிலும் இந்த வருடம் மார்ச் மாதம் 2-ம் திகதிதான் இலங்கைக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்திருக்கிறது."

அங்குறுவதோட்ட வெரவத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஒலிபரப்பு டைரக்டர் ஜெனரல் திரு. ரொனி டி' மெல் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்

அவர் தொடர்ந்து கூறியதாவது: "சர்வாதிகாரச் சின்னத்தைக் கொண்டிருந்த கவர்னர் ஜெனரலின் காரியாலயம் இப்பொழுது நாட்டின்மீதும் சமயத்தின்மீதும் நல்லெண்ணம் கொண்ட ஒரு உண்மையான சிங்களவரினுல் நிரப்பப்பட்டிருக்கிறது.

# காணுமற்போன பஸ் மரத்தில் மோதியது

சிலாபம், வெள்ளி

கடந்த புதன்கிழமை இரவு சிலாபம் பஸ் நிலையத்திலிருந்து நீர்கொழும்பு டிப்போவுக்குச் சொந்தமான ஒரு இ. போ. ச பஸ்ஸை, சில இ. போ. ச ஊழியர்கள் கடத்திச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதை அறிந்த சிலாபம் டிப்போ மனேஜர் பொலிசாரின் உதவியுடன் பஸ்ஸைத் தேடிச் செல்லுகையில், காக்கபள்ளியாவுக்கருகாமையிலுள்ள பம்பால என்ற இடத்தில் ஒரு பஸ், மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்ததைக் கண்டனர்.

இதுசம்பந்தமாக சிலாபம் பொலிசார், சில இ. போ. ச. ஊழியர்களை விளக்கமறியலில் வைத்துள்ளனர். மற்றும் சிலரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

# தோட்டப்பகுதிகளில் நகரமைப்பு வேலைகள்

## விவசாய மந்திரி யோசனை

கொழும்பு, வெள்ளி

தோட்டப் பகுதிகளில் நகரங்களை நிறுவுவதற்கான திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொள்விருக்கிறது. தோட்டப் பகுதிகளிலுள்ள 'பஸார்' சுவீகரிப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி நகரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

தோட்டப் பகுதி 'பஸார்'களுக்கு அருகாமையிலுள்ள நிலப் பகுதிகளில் வழிபாட்டுக்குரிய பன்சாலைகள், கிராம அபிவிருத்திச் சங்க நிலையங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை அரசாங்கம் நிறுவவிருக்கிறது.

தோட்டப் பகுதி நகரமைப்புத் திட்ட வேலைகளுக்கெனத் தோட்ட 'பஸார்'களும் 'பஸார்'களுக்கு அருகாமையிலுள்ள நிலப்பரப்புக்களும் சுவீகரிக்கப்படும்.

'வலப்பனை, கொத்மலி, நுவரேலியா ஆகிய மூன்று மாவட்டங்களில் திட்ட வேலைகளை ஆரம்பிப்பதுபற்றி காணி, விவசாய அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா அம்மாவட்ட டி. ஆர். ஓ.க்களிடம் பிரஸ்தாபித்துள்ளார். அப்பகுதிகளிலுள்ள 'பஸார்' நிலங்களைச் சுவீகரிப்பது சாத்தியமாகுமா என அறியும்படி காணி அமைச்சர் டி. ஆர். ஓ.க்களைக் கேட்டுள்ளார்.

### தேவை

சகுதிவாய்ந்த செல்வாக்குள்ள சொந்த ஊரிலேயே வசிப்பவர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தேவை. பருத்தித்துறை, மீசாலை, கொடிகாமம். இணுவில், சுன்னுகம், மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை மற்றும் நயினுர்தீவு, புங்குடுதீவு முதலான தீவுப்பகுதிகளுக்கும். முதல் கொமிஷன் மாத்திரம் கொடுக்கப்படும். காரியதரிசி, அந்தியகால சகாய நிதிச் சங்கம், லிமிட்டெட் 330, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் தீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### பாடப்புத்தகங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து மூன்றும், ஐந்தாம் மனக்கணிதம், மூன்றும் சூழல், விஜயன் விக்டோரியா இலங்கைச் சரித்திர விளக்கம் புதியபதிப்புகள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர்கட்கும் கொமிஷனுண்டு. தேவைக்கு எழுதுக. கலாபவனம், பருத்தித்துறை.

# வாடகை சைக்கிளை திருப்பிக் கொடுக்கவில்லை

## எதிரிக்கு 2 மாதச் சிறை

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த இராசையா செல்வராசா என்பவர் மீது வாடகைக்கு துவிசக்கரவண்டிகளை கடைகளில் எடுத்து திருப்பிக் கொடாது நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் எதிரிக்கு 2 மாதச் சிறைத் தண்டனைவிதித்துத்தீர்ப்பு வழங்கினுர்.

—

# பாடசாலையை திருத்துக

ஊர்காவற்றுறை, வெள்ளி

சென்ற மாதம் இரண்டாம் தேதி வீசிய சூறாவளிக் காற்றின் வேகத்தால் தாக்கப்பட்டு தரைமட்டமான சரவணை சின்னமடு பாடசாலையை உடனடியாகப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற நாரந்தனை கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

— —

# அணு ஆயுதம் ஜப்பான் தரிக்காது

டோக்கியோ, மார்ச் 9

ஜப்பான் எந்தச் சந்தர்ப்பத்திலும் அணு ஆயுதம் தரிக்காதெனன ஜப்பானில் பிரதமர் திரு. இக்கேடா கூறினுர்.

# உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் ௸. மதல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 27-ந் தேதி சனிக்கிழமை (10-3 62) பகல் 7-51 வரை சதுர்த்தி பின் பஞ்சமி. காலை 6-59 வரை அச்சுவினி பின் பரணி பின்னிரவு 6 05 வரை சித்தஅமிர்தயோகம் வர்த்தகத்துக்கு நல்ல தினம்

## இன்றுபிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு இவ்வாண்டிலே தொழிலபிவிருத்தி, பெரும்புகழ் அடைதல், சொத்துக்கள் சேர்தல், புதிய பதவிகள் வருதல், குடும்ப சந்தோஷம் ஆகியன காணப்படுகின்றன. உடல் நலக் குறைவுகள் ஆண்டின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் காணப்படுகிறது. பணநிலைமை பொதுவாக சீராக இருக்கும். பெண்களுக்கு சுடா் ரும பலன்களுள

## நட்சத்திரப்பலன்

அச்சுவினி: தொழில் ஊக்கம், பணவரவு.

பரணி: வீண் செலவு, அற்பர் தொல்லை.

கார்த்திகை: நல்லோர் நட்பு, தெய்வவழிபாடு.

ரோகிணி: வாக்கு வெற்றி, வித்தை உயர்ச்சி.

மிருகசீரிடம்: வீண் அலைச்சல், கடன் தொல்லை.

திருவாதிரை: தொழில் சிறப்பு, பணவரவு,

புனர்பூசம்: வாகனகஷ்டம், பிரயாணத்தொல்லை.

பூசம்: குடும்ப சந்தோஷம், நிம்மதி.

ஆயிலியம்: குடும்பத் தொல்லை, பணமுடை.

மகம்: நல்லோர் நட்பு, சந்தோஷம்.

பூரம்: கடும் உழைப்பு, மறதியால் நட்டம்.

உத்தரம்: செலவு அதிகரிப்பு, நிம்மதியிழப்பு.

அத்தம்: தொழில் வெற்றி, பணவரவு.

சித்திரை: பகை, மதிப்பிழப்பு, கவலை.

சுவாதி: புத்திசாதுரிய வெற்றி, மதிப்பு.

விசாகம்: குடும்பத் தொல்லை, நிம்மதியழிவு.

அனுஷம்: பெரியோர் நட்பு, நிம்மதி.

கேட்டை: பிரயாணக் கஷ்டம், கவலை.

மூலம்: தேகசுகம், சந்தோஷம்.

பூராடம்: குடும்பக் கஷ்டம், செலவதிகரிப்பு

உத்தராடம்: இனசன உதவி, பணவரவு.

திருவோணம்: பிரயாண நன்மை, தொழிற் சிறப்பு.

அவிட்டம்: கடும் உழைப்பு, பலிததாமதம்.

சதயம்: வித்தை மேன்மை, மதிப்பு.

பூரட்டாதி: இழிந்தோர் தொல்லை, செலவு அதிகம்.

உத்தரட்டாதி: குடும்ப சந்தோஷம், நிம்மதி.

ரேவதி: நண்பரால் செலவு, கடன்படல்.

# டொமினிக்கனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 9

டொமினிக்கன் குடியரசில் நேற்று அரசாங்கத்துக்கெதிராக பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாய் அறிவிக்கப்படுகிறது.

— —

ரங்கூன், மார்ச் 9

பர்மிய தேர்தல் கமிஷனையும், ஆலோசனை சபையையும் புரட்சி ஆட்சிகலைத்து விட்டது.

# கைப்பந்தாட்ட போட்டிகள்

பருத்தித்துறை, வெள்ளி

புத்தாண்டு விழாவையொட்டி பருத்தித்துறை பொலிஸ் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மேற்பிரிவுப் போட்டி ஆட்டங்கள் நேற்றையதினம் மாலை ஆரம்பமாகியது.

18 கோஷ்டிகள் கலந்துகொள்ளும் இப்போட்டி ஆட்டங்களின் இறுதி ஆட்டங்கள் ஏப்ரல் 1-ம் திகதியும் சாம்பியன் தேர்வுக்கான ஆட்டம் ஏப்ரல் 14-ம் திகதி புதுவருடத்தன்று நடைபெறும்.

நேற்றய தினம் புலோலி தெற்கு ஜெயம் கழகமும் கரவெட்டி விக்னேஸ்கரா கழகமும் கலந்து கொண்டபோட்டியில் விக்னேஸ்வராக் கழகம் 15:4, 15:8 புள்ளிகளால் ஜெயம் கழகத்தை வெற்றியீட்டியது.

கரவெட்டி உதயசூரியன் கோஷ்டியும் உடுப்பிட்டி சிவானந்தாவும் கலந்துகொண்ட போட்டியில் சிவானந்தா 15:5, 15:3 புள்ளிகளால் வெற்றியடைந்தது.



# அல்ஜீரியர்-பிரெஞ்சு வீரர் மோதல்

## டுனிஸிய எல்லையில் சம்பவம்

டுனிஸ், மார்ச் 9

**அல்ஜீரிய-டுனிஸிய எல்லையில் தேசியவாதிகளுக்கும், பிரெஞ்சுத் துருப்புக்களுக்குமிடையே நேற்றுச் சண்டை ஏற்பட்டதென்றும், இதன் விளைவாய் 5 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாயும், 20 பேருக்குக் காயம் ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.**

டுனிஸியாவிலிருந்து பீரங்கிகளால் தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது. ஆனல் இதன் விளைவாக அல்ஜீரிய-பிரெஞ்சு பேச்சு வார்த்தைகள் பாதிக்கப்படமாட்டாதாம்.

சிறையிலுள்ள பென்பெல்லாவும், மற்றும் 4 தேசியத் தலைவர்களும் நாளை ரபாட் செல்வார்கள் என்று தெரிகிறது. பிரெஞ்சு-அல்ஜீரிய உடன்படிக்கை வெற்றி பெறும் எனக் கருதப்படுவதால் அடுத்த வாரம் பாரிஸில் தேசிய அசெம்பிளி கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# ரொடீஷிய சம்மேளனத்தில் பொதுத் தேர்தல்

## பிரதமர் வெலன்ஸ்கி அறிவிப்பு

ஸாலிஸ்பரி, மார்ச் 9

ரொடீஷிய சம்மேளனத்தில் பெடரல் பார்லிமெண்டைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தப்போவதாய், பிரதமர் சர்ராய் வெலன்ஸ்கி அறிவித்திருக்கிருர் நயாஸாலாந்துசம்மேளனத்தில் இருப்பதற்குவாக்கெடுப்பு நடத்த போவதாயும், வட ரொடீஷியாவுக்கான அரசியல் சாஸனம் ஏற்றதில்லை என்றும், நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும், அரசியல் தலைவர்கள் சிலர் இதனுல்பலாத்காரத்தில் ஈடுபடுவார்கள் என்றும், எனவே புதிய வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும் சர் ராய் வெலன்ஸ்கி கூறினர்.

---

# குறைந்த விலையில் பெட்ரோல் இறக்குமதி

## ரஷ்யா, ருமேனியாவிலிருந்து கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

ரஷ்யா, ருமேனியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து குறைந்த விலைக்கு பெட்ரோலியம் இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகளை இலங்கைப் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் செய்துள்ளது. கலன் ஒன்றுக்கு 35 சத வீதம் இலங்கைப் பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு வழங்க ரஷ்யா, ருமேனியா ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன. ஏனைய கம்பனிகள் கலன் ஒன்றுக்கு 49 சத வீதமே பெட்ரோல் இறக்குமதி செய்கின்றன எனவும், அவற்ருேடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கைப் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் 25 சத விகிதம் குறைந்த விலைக்குப் பெட்ரோல் இறக்குமதி செய்யவிருக்கிறது எனவும் கார்ப்பரேஷன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து பெட்ரோல் கொண்டு வரும் முதல் கப்பல் ஏப்ரல் 8 ம் திகதியன்று இங்கு வந்து சேரும். இந்தக் கப்பல் 30 லட்சம் கலன் பெட்ரோலை ஏற்றி வரும். ரஷ்யாவிலிருந்து பெட்ரோல் கொண்டு வரும் முதல் கப்பலில் 7,50,000 கலன் திறமான பெட்ரோல் இங்கு வந்து சேரும்.

---

## அமெரிக்க வெளி நாட்டு மந்திரி

வாஷிங்டன், மார்ச் 9

அமெரிக்க வெளி நாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் ஆயுதப்பரிகரண மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நாளை ஜெனிவா புறப்படுவார். பேர்லின் பிரச்சனை பற்றி அவர் நேற்று மேற்கு ராஜதந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

---

## திருமதி கென்னடி இந்தியா புறப்பட்டார்

வாஷிங்டன், மார்ச்-9

அமெரிக்க ஜனதிபதியின் மனைவி திருமதி ஜேக்கலின் கென்னடி இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் புறப்படும் பொருட்டு நேற்று வாஷிங்டனிலிருந்து விமானத்தில் பிரயாணமானர். திருமதி கென்னடி அவரை வழியனுப்பிவைத்தார்.

ஸ்ரீமதி கென்னடி நியூயோர்க் சென்று தன் சகோதரியுடன் சேர்ந்து, பின் இருவரும் ஞாயிற்றுக் கிழமை இரவு புதுடில்லி வருவார்கள்.

---

# 60 பராமரிப்பு விடுதிகளில் 20,000 குழந்தைகள்

## சமூகசேவை இலாகா மதிப்பீடு

கொழும்பு, வெள்ளி

சமூக சேவைகள் இலாகாவினுல் நடத்தப்படும் குழந்தைகள் பராமரிப்பு விடுதி சம்பந்தமாக அறிவிக்கும்படி, தேசிய கல்விக் கமிஷன் சமூக சேவா இலாகாவைக் கேட்டுள்ளது.

சமூக சேவைகள் இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் இது குறித்து தெரிவிக்கையில், இலாகாவினுல் நடத்தப்படும் 60 குழந்தைகள் பராமரிப்பு விடுதிகளில், சுமார் 20,000 குழந்தைகள் இருக்கின்றனரென்று கூறினர்.

வேலைசெய்யும் தாய்மாருக்கு உதவிசெய்யும் பொருட்டே, குழந்தைகள் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. வேலை செய்யும் தாய்மார்கள், தங்களது குழந்தைகளை வீட்டில் பராமரிக்க யாரும் இல்லாவிடில் அவர்கள் குழந்தைகளை இப்பராமரிப்பு விடுதிகளில் கொண்டுபோய் விட்டுப் பின்னர் வேலை முடிந்து வீடு திரும்புகையில், விடுதிகளிலிருந்து தங்களது குழந்தைகளை எடுத்துக்கொண்டு செல்ல இது வகைசெய்கிறது என்றும் அவர் மேலும் கூறினர்.

---

## புதுடில்லியில் முதன் மந்திரிகள்

புதுடில்லி, மார்ச்-9

மைசூர் முதன் மந்திரியாக திரு எஸ். ஆர். காந்தி இன்று பதவி ஏற்ருர்.

பஞ்சாப் முதன் மந்திரி திரு கெய்ரோன் பிரதமர் நேருவை நேற்று இரண்டு தடைவகள் சந்தித்துப் பேசினர்.

தமிழ் நாட்டுமுதன் மந்திரி திரு. காமராஜ், ஆந்திர முதன் மந்திரி திரு. சஞ்சீவிரெட்டி ஆகியோர் டில்லி வந்தனர். பங்களூர் சென்றிருந்த யூனியன் உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதுா சாஸ்திரி டில்லி திரும்பினர்.

---

## மத்திய வியட்னமில் கொரில்லா தாக்குதல்

வியட்னம், மார்ச் 8

மத்திய வியட்னமில் ஒரு பிரதேசத்தில் கொரில்லாப் படையினரின் தாக்குதலால் 13 அரசுத் துருப்புக்கள் கொல்லப்பட்டன.

கொரில்லாப் படையினர் 62 பேரைக் கைது செய்துள்ளனர். இத்தாக்குதலால் 8 பேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டநேரத் தாக்குதலால் பல இடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

---

## டெஸ்ட் கிரிக்கெட்

கிங்ஸ்டன், மார்ச் 9

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே நடைபெற்றுவரும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-ம் நாளான நேற்று, இந்தியா 395 ரன்களுக்கு முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது. மேற்கிந்தியக்கோஷ்டி ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 157 ரன்கள் எடுத்தது.

---

## அடுத்த பார்லிமெண்ட் கூட்டத்தில் பல மசோதாக்கள்

கொழும்பு, வெள்ளி

அடுத்தவாரம் பார்லிமெண்ட் கூடும்போது பெருந்தொகையான மசோதாக்கள் ஆலோசனைக்கு எடுக்கப்படும். பார்லிமெண்ட் எம். பி.க்கள் கேட்கவிருக்கும் சுமார் 25 கேள்விகளுக்கு மந்திரிமாரும் அவர்களது பார்லிமெண்டரிக் காரியதரிசிகளும் பதிலளிப்பார்கள். மார்ச் 13-ம் திகதி கூடவிருக்கும் பாலிமெண்டரிக்கூட்டத்தில் மொத்தமாக 116 விஷயங்கள் பற்றி முடிவுகள் செய்யப்படும்

---

## ஐ. நா. கமிஷன் அறிக்கை சமர்ப்பணம்

நியுயோர்க், மார்ச் 9

முன்னுள் தலைமைக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி விசாரணை நடத்திய ஐ. நா. கமிஷன், தன் அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது.

---

# கிழக்கு மாகாணத்திற்கு புதிய பஸ்களை அனுப்புக

## மோட்டார் தொழிலாளர் கூட்டத்தில் கோரிக்கை

மட்டக்களப்பு, வெள்ளி

கிழக்கு மாகாண பஸ் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு புதிய பஸ்கள் உடனடியாக அனுப்பப்பட வேண்டுமென்னும் தீர்மானம் மட்டக்களப்பில் நடைபெற்ற மோட்டார் தொழிலாளர் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மட்டக்களப்பு அம்பாரை ஆகிய இடங்களிலு மோட்டார் தொழிலாளர் யூனியன்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மிக மோசமான பஸ்கள்மட்டுமே கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்படுவதால், இப்பகுதி பஸ் சேவை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், இதனுல் பஸ் பிரயாணிகள் மட்டுமல்லாது மோட்டார் தொழிலாளர்களும பெரும் கஷ்டம் அடைவதாகவும், அரசாங்கம் மேலும் தாமதிக்காமல் இப்பகுதிக்கு புதிய பஸ்களை அனுப்ப வேண்டுமென்றும், தொழிற் சங்க மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. கே. வி. கிருஷ்ணக்குட்டி தெரிவித்தார்.

திரு. ஸ்டீவன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

---

## மட்டக்களப்பில் சிவராத்திரி

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்புப் பகுதியில் சிவராத்திரி வைபவம் வழமை போல் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு ஆனைப்பந்தி விநாயகர் ஆலயம், கோட்முனை ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், மாமாங்கப் பிள்ளையார் கோயில், மஞ்சந்தொடுவாய் விநாயகர் ஆலயம், ஆரயம்பதி ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகியவற்றிலும், கல்லடிஉப்போடை இராமகிருஷ்ண சங்கத்திலும், நான்கு சாமத்திலும் விசேச பூசைகளும் ஆராதனையும் நடைபெற்றன.

---

## புதிய மாவட்ட நீதிபதி

### திரு. கிரெட்சர் பதவி ஏற்ருர்

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு கூட்டு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. ஓ. எல். டி' கிரெட்சர் இம்மாதம் 9-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக நேற்று பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட திரு. கிரெட்சர் வைத்திய விடுமுறையில் இப்பொழுது சென்றுள்ளார். திரு. என். சிவஞானம் சுந்தரம் அவருக்குப் பதிலாகக் கடமையாற்றுகின்ருர்.

---


**டிப்ளோமட் DIPLOMAT** சேட்டுகள்

★ தரத்தில் சிறந்தது
★ பாவனைக்குகந்தது

பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஏற்ற அளவுகளில் உள்ளன.

| | | |
|---|---|---|
| பொப்பிலர் Popular | வெள்ளை | |
| ,, | முழுக்கை சேட் | 6-50 |
| ,, | கலர் முழுக்கைச் சேட் | 7-00 |
| ,, | 'டிலக்ஸ்' வெள்ளை சேட் | 7-50 |
| | ,, கலர் ,, | 8-00 |
| டிப்ளோமட் Diplomat | வெள்ளை அரைக்கை சேட் | 6-00 |
| ,, | 'டவுண்' வெள்ளை கலர் | 9-75 |
| ,, | 'நொன் அயன்' சேட் வெள்ளை | 10-50 |
| ,, | 'டெட்ரேன்' கலர் வெள்ளை நூல் | 19-50 |
| ,, | 100 'டெக்கரேன்'பான்ஸி கோடுகள் போட்டவை | 25-00 |
| Diplomat டிப்ளோமட் | சிறுவர்களுக்கு அரைக்கை வெள்ளை கலர் | 4-50 |

மொத்தவிற்பனை விசாரணைகளுக்கு

**டயரும்ஸ்**

(யாழ்ப்பாணத்தின் ஏக விநியோகஸ்தர்கள்)

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

### மணி வாக்கு

"துன்பப் படுவோருக்குச் சேவை செய்தால் அதுவே கடவுளுக்குச் சேவை செய்த தாகும்."

—சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 27 உ ( 10-3 62)


# "தீண்டாமையை அகற்றுவிடில் முன்னேற்றமில்லை"

## கிராமசபை தேநீர்க்கடை திறப்புவிழாவில் எம். பி.

சுன்னாகம், வெள்ளி

"சமுதாயத்தின் சாபத்தீடாக இருந்துவந்த தீண்டாமை என்னும் நோயைத் தமிழ்மக்களின் மத்தியிலிருந்து அகற்றுவிடில் அது எமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருந்துவரும் சாதிப்பாகுபாடற்ற முறையில் நடாத்துவதற்கென இத்தேநீர்க்கடையைக் கட்டி உதவிய உடுவில் கிராமச் சபையைத் தொடர்ந்து ஏனைய இடங்களிலும் இவ்வித முன்மாதிரியான கடைகள் திறக்க முன்வருவார்களென நம்புகின்றேன்."

இவ்வாறு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் சுன்னாகம் சந்தைக்கருகாமையில் உடுவில் கிராமச் சங்கத்தினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு தேநீர்க்கடையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

திறப்புவிழாவிற்குத் தலைமை வகித்த உடுவில் கிராமச் சங்கத் தலைவரும் உடுவில் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"சகல பாகுபாடுகளையும் அகற்றித் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒரே மாதிரி மதித்து பணங்களும் உணவுவகைகளும் விநியோகிக்கப் பரஞ்சோதி அவர்கள் முன்வந்ததற்கு நாம் போற்ற வேண்டும் தமிழ் மக்கள் முன்னேறுவதற்கு ஒற்றுமை முக்கியமானது.

நாம் உத்தியோகம் பார்த்து எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதென்பது இயலாத காரியம். கமம், கைத்தொழில் வியாபாரஞ் செய்ய முன்வர வேண்டும். வியாபாரம் கண்ணியமான நேர்மையான முறையில் நடத்தினால் அதை நடாத்துபவர் நன்கு முன்னேற வசதியுண்டு.

உடுவில் கிராமச்சபையில் சந்தை வட்டார உறுப்பினராகவுள்ள திரு. ஹென்றி பேசும்பொழுது பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஒத்தாசை இல்லாது சட்டம் மூலம் சிறுபான்மைப் பிரச்சினைகளைத் தீர்க்கலாமென நினைத்தால் அது பகற்கனவே என்றார்.

உடுவில் கிராமசபை உபதலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பேசும்பொழுது அக்கடை திறக்கப்பட்ட நோக்கத்தைப் பூர்த்தி செய்யப் பொதுமக்கள் ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசும்பொழுது பின்வருமாறு கூறினர்:

இக்கடை சுன்னாகத்தில் திறக்கப்பட்டது மிகப் பொருத்தமானதாகும். யாழ்ப்பாண நகரில் பல போசனசாலைகள் சாதிப்பாகுபாடற்ற முறையில் நடாத்தப்பட்டு வருகின்றன. வடபகுதியின் இரண்டாவது நகராகக் கணிக்கக் கூடிய சுன்னாகத்தில் இக்கடை திறக்கப்பட்டதும் ஏனையோரும் அவ்விதம் பாரபட்சமற்ற முறையில் நடாத்த முன்வருவார்களென நம்புகிறன்.

அரசாங்கத்திடம் அற்ப சலுகைகள் பெற்றுச் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகளை ஒருபொழுதும் தீர்க்க முடியாது. உயர்சாதி அன்பர்கள் பாரதநாடு எவ்விதம் மகாத்மா காந்தியின் தலைமையில் சாதிப் பிரச்சினையைதீர்த்துமுன்னேறியதென்பதைகவனிக்க வேண்டும். தம்முள் மனமாற்றத்தை உண்டுபண்ணி சிறுபான்மை பெரும்பான்மையென்ற வித்தியாசத்தைக் களைந்தெறிந்து தமிழராகிய நாம் முன்னேற வழிவகுக்குமாறு வேண்டுகின்றேன்.

அரசாங்கத்திற்கு நான் ஒரு முக்கிய வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். வடபகுதியில் வாழ்ந்துவரும் சிங்கள மக்களின் புனர்வாழ்விற்கென்று அரசாங்கத்தின் கேள்விக்கிசைந்து ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு பேக்கரிகளுக்குப் பெரிய நட்டம் வர வழிவகுக்கின்றனர். இதனால் கூட்டுறவு ஸ்தாபனங்களையே மூடும் நிர்ப்பந்தம் ஏற்படும் போலிருக்கிறது. தென்பகுதியில் வாழ்ந்த பல தமிழ் மக்களின் வாழ்க்கை சீர்குலைந்திருக்கின்றது. அவர்களுக்கும் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை பாரபட்சமற்ற முறையில் அரசாங்கமே வகுக்க வேண்டும்."

## வெட்கக்கேடு

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கை, தனக்குத் தேவையான மச்ச உணவுகளுக்கு தூரத்திலுள்ள ஈரான், ஏடன் முதலிய நாடுகளை எதிர்பார்ப்பது வெட்கக்கேடாகும்.

இலங்கையில் கருவாட்டுக்குப் பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாயும், புதுவருடத்துக்குள் இது கிடைத்துவிடுமென்றும், பொது மக்களுக்கு ஒரு செய்தி 'ஆறுதல்' கூறுகிறது. இலங்கையைச் சுற்றிய கடலில், அதுவும் வடக்கு கிழக்கு பகுதிகளில்ஏராளமான மச்சங்கள் இருப்பதாயும், இவற்றைப் பிடிக்க தக்க ஒழுங்குகள் செய்தால், இலங்கையின் தேவை போக, பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாமென்று வெளி நாட்டு நிபுணர்கள் இங்கு வந்து பரிசீலனை செய்து வெளியிட்டுள்ள அறிக்கைகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுதவன் கதையாக இருக்கிறது இலங்கையிலே மச்ச உணவுப் பஞ்சத்தைப்பற்றிய கதை.

இலங்கை கூட்டுறவு மீன் விற்பனை யூனியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையிலே கருவாடு உற்பத்தி செய்ததில் அதிக நஷ்டமேற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1960-ம் வருடத்தில் இச்சங்கம் கருவாடு உற்பத்தி செய்து விற்பனை செய்ததில், 26 ஆயிரம் ரூபாய்க்குமேல் நஷ்டமேற்பட்டதாம். கருவாடு உற்பத்தி செய்யும் தனிப்பட்டவர்கள், நல்ல லாபம் சம்பாதிக்கையில், கூட்டுறவுச் சங்கம் ஏன் இவ்வளவு நஷ்டப்படவேண்டுமென்பது தெரியவில்லை. தனிப்பட்டவர்களுக்கு போதிய உதவியும், வசதியும், உற்சாகமுமளித்தால் இது நல்ல லாபத்தில் நடப்பதுடன், இலங்கைக்குத் தேவையான மச்ச உணவுகளெல்லாம் தட்டாமல் கிடைக்கலாகும்.

கடலில் வெகுதூரம் துணிச்சலுடன் சென்று மீன் பிடிக்கும் வீரர்கள் இங்கு பலருண்டு. ஆனால் அவர்களுக்குப் போதிய மோட்டார் வள்ளங்களோ, நவீன வசதிகளோ இல்லை. அரசாங்கமும் இவ்விஷயத்தில் வேற்றுமை காட்டாமல், தக்க வசதிகளை அளிக்குமாயின், மீன் பஞ்சம் வெகுவாகக் குறையக் கூடும்.

மச்ச உணவுக்காக, இலங்கையிலிருந்து வருடா வருடம் அதிகமான செல்வம் வெளியேறுகிறது. இலங்கையிலேயே இதை உற்பத்தி செய்ய முடியுமாயின், இந்தப் பணம் இலங்கையிலேயே இருக்கும். முன்னர், மீன் பிடிக்க தமிழ் நாட்டிலிருந்து பலரை தனிப்பட்டவர் இங்கு வரைவழைத்து, இந்த உணவு தட்டாமல் கிடைக்கச் செய்து வந்தனர். ஆனால் விஸா முதலிய கெடுபிடி காரணமாக, இது பெரிதும் தடைபட்டுவிட்டது. இங்கு உணவு உற்பத்தியைப் பெருக்கும் விஷயம் உயிர் போன்றது. இதில் 'விஸா' கெடுபிடிகளை அவசியமாயின் சற்றே தளர்த்தி உணவு உற்பத்தியைப் பெருக்க தனிப்பட்டவர்களுக்குக் கூடுமான உதவிகளை அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டியதவசியம். இதில் தக்க ஒழுங்குகளைச் செய்தால், பொது மக்களுக்கு உணவுப் பஞ்சமேற்படாததுடன், நாட்டின் செல்வமும் அதிகம் வெளியேறுமலும் தடுக்கலாம்.

## வரவேற்கத்தக்க நடவடிக்கை

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெரியகொக்கோ தோட்டத்தைத் துண்டாடப் போவதாயும், இதனால் 3000 தொழிலாளருக்கு வேலையில்லாமற் போகுமென்றும் புகார் செய்யப்பட்டதும் இதைத் தடுக்க, காணி அபிவிருத்தி மந்திரி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அவசரமாக நிறைவேற்ற முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

சுயலாபத்துக்காக தேயிலை, ரப்பர் தோட்டங்கள் துண்டாடப்படுவதை ஏற்கனவேயுள்ள சட்டம் தடுக்கின்றது. கொக்கோ தோட்டத்துக்கு அந்தத் தடையில்லை. இதை திரு. தொண்டமான் மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்ததும், அவர் நடவடிக்கை எடுத்துள்ளது விசேஷமாகும். இதே மாதிரிப் பல விஷயங்களிலும் ஒத்துழைப்பு நிலவுவது மேலும் விரும்பத்தக்கது.

### இரத்தினக் கம்பளம்

## ஆறி அலர்ந்த அறிக்கை

பதுமன்

டாக்டர் என்.எம்.பெரேரா எந்த ஆண்டில் கொழும்பு மாநகர சபையின் மேயராகப் பதவி வகித்தார் என்று உங்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ நான் அறியேன். ஆனல் அவர் மேயராகப் பதவி வகித்த காலத்தின் நிர்வாக அறிக்கை இப்போதுதான் வெளிவந்திருக்கிறதென்பதை அறியும்போதுதான் நீங்கள் என்னதான் எண்ணுவீர்களோ! டாக்டர் இரண்டு மாதங்கள்தான் கொழும்பு மேயராக விளங்கினர். அவருக்கும் கமிஷனருக்குமிடையே சுப்ரீம் கோர்ட் மூலம் வழக்கு நடாத்த ஒழுங்கு செய்வதில் இந்த இரண்டு மாதகாலமும் கழிந்துவிட்டது. எனவே, அந்த நாட்களில் ஆக்கபூர்வமான வேலை எதுவும் நடைபெறவில்லை என்ற விபரம் 1956-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையிற் கண்டிருக்கின்றது.

1956-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து டிசம்பர்வரை திரு வி. ஏ. சுகததாசா மேயர் பதவியில் அமர்ந்தார். கொழும்பிலுள்ள சேரிகளில் வசிப்போரின் பிரச்சினை இந்த மேயரின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றது.

பாருங்கள், 1956-ம் ஆண்டுக்குரிய நிர்வாக அறிக்கை ஐந்து வருடங்களுக்குப் பின்னர்தான் வெளியாகியிருக்கின்றது. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்று சொல்லுவார். ஆனல், இந்த அறிக்கையையோ ஆறி அலர்ந்த அறிக்கை என்றே கூறவேண்டும்.

### குப்பை கூளம்

கொழும்பு மாநகரம் முன்னர் எல்லாம் துப்புரவான நகரம் எனப் பலராலும் புகழப்பெற்றது. கீழைத் தேசங்களில் கொழும்பு நகரத்தைப்போல் துப்புரவான நகரத்தைக் காணமுடியாது என்ற சிறப்புக்கும் இது இலக்காக விளங்கிற்று. இப்போது என்னவென்றால் கொழும்பு மாநகரம் குப்பை கூளங்கள் நிறைந்த நகரம் என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது. இச்சீர்கேட்டைப் பற்றி மேயர் 1956-ம் ஆண்டிலேயே குறிப்பிட்டிருந்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே அவருடைய நிர்வாக அறிக்கை வெளிவந்திருப்பதால் கொழும்பு வீதிகளில் குப்பை கூளங்கள் மேலும் குவிந்திருக்குமென்றே எதிர்பார்க்கவேண்டும்!

### 'தொஸ்தர்'

டாக்டர் என். எம். பெரேரா தத்துவ சாஸ்திரத் துறையில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர் என்பதை எத்தனை பேர் அறிவார்களோ. இருந்தும் அவர் மக்களின் அரசியல் நாடி ஓட்டங்களை நன்கு அறிந்த ஒரு அரசியல் மேதையாவார். ஆனல் சிலர் கருதுவதுபோல் அவர் வைத்திய துறையில் டாக்டர் பட்டம் பெற்ற ஒரு டாக்குத்தர் அல்ல. சிங்கள மக்கள் ஆங்கில வைத்தியர்களை 'தொஸ்தர்' என்பார்கள்.

இந்த 'தொஸ்தர்' பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவைச் சிரிக்கும்படி செய்துவிட்டார். டாக்டர் என். எம். பெரேராவை 'தொஸ்தர் என். எம். பெரேரா' என்று செனட்டர் ஒருவர் சபைக் கூட்டத்திற் குறிப்பிட்டபோது, பிரதமர் 'கொல்' எனச் சிரித்துவிட்டாராம். அவர் அம்மட்டுடன் நில்லாது தமக்கு அருகிலிருந்த வேறொரு செனட்டரிடம் கூற, அவரும் விழுந்து விழுந்து சிரித்தாராம். நித்தம் ஒரு முறை சிரித்தால் டாக்டரிடம் வைத்தியத்துக்குப்போக வேண்டியதில்லை என்பதை எங்களில் எத்தனை பேர் அறிவார்களோ!

### 'முல்லை நகர்'

முல்லை என்று சொல்லும்போதே நறுமணம் தவழ்ந்து வருவதுபோல் இருக்கும். ஆம், மூன்று எழுத்தான இந்த சொல்லுக்கும்தான் எவ்வளவு மகிமை. 'முல்லை மலர் எடுத்தே அழகிய முத்தாரம் கோர்த்திடுவோம்' என்று குழந்தைகள் பாடி ஆடுவார்கள்.

கடுங்காடு சேர்ந்த இடத்தையும் முல்லை என்பார்கள் பண்வகைகளில் முல்லையும் ஒன்று. இப்படியான சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட முல்லையானது தீவோடு சேர்ந்திருப்பதை இப்போது விரும்புவதாயில்லை. முல்லைத்தீவு என்ற பெயரை மாற்றி முல்லை நகர் என அழைக்கப்படவேண்டுமென்ற ஒரு தீர்மானம் முல்லைத் தீவு பட்டின சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

இனிமேல் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்குச் சென்றால் ஒரு பக்கத்தில் காரை நகர் பஸ்ஸும், மற்றப் பக்கத்தில் முல்லை நகர் பஸ்ஸும் நின்று முறுவல் செய்யும் அழகைப் பார்த்து நாமும் சிரிக்கலாம்!

### ஐயாறன் எழுதுவது

மூன்றும் முறையாக தமிழ் நாட்டின் முதல் மந்திரியாகியுள்ளார் காமராஜர். மூன்றும் 'படிவம்' கூட படிக்கவில்லையாம் அவர். அப்படிப்பட்டவர் ஐ. ஸி. எஸ். முதலிய பெரிய பெரிய படிப்புகளைப் படித்தவர்களை வைத்து எட்டுவருடமாக ஆட்சி நடத்துவதுடன், இன்னும் 5 வருடங்களுக்கு ஆட்சி நடத்தவும் மக்களின் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றர். இது ஓர் அதிசயமல்லவா?

* * *

பண மூட்டைகளை அடுக்கி வைத்து அதன் மீது ஏறி ஆட்சி அதிகாரத்தை காங்கிரஸ் கைப்பற்றுவதாக 'கல்கி' பத்திரிகையில் ஒரு காட்டூன் படத்தைப் பார்த்தேன். இதைப் பற்றிய உண்மை எனக்குத் தெரியாது. ஆனல் காமராஜர் ஒரு பண மூட்டையல்ல. அவர் தமக்காக எதுவும் சேர்த்து வைத்துக் கொண்டதாக, அவரது அரசியல் எதிரிகளும் கூறவில்லை. இடுப்பில் நான்கு முழ கதர் வேட்டி, மேலுக்கு அரைக்கை சட்டை, ஒரு கதர் துண்டு. காலில் செருப்பு. இதுதான் 8 வருட காலமாக முதல் மந்திரியாகவுள்ள ஒரு ஒரு 'பச்சைத் தமிழரின்' உடை. வேறு யாராக இருந்தால் என்ன ஆர்ப்பாட்டமெல்லாம் செய்திருப்பர்!

* * *

8 வருடகாலமாக தமிழ்நாடு ஆட்சிப் பொறுப்பை, பல சோதனைகளையும்மீறி நடத்துவதென்பது சாதாரண காரியமன்று. அதற்குள் எவ்வளவு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எல்லாம் வந்திருக்கும்!

கட்சிக்குள்ளாகவே எவ்வளவு பிளவுகள் ஏற்பட்டிருக்கும்! அப்படி எதுவும் ஏற்படாமல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி கலையாமல் பார்த்துக் கொண்டதுடன் இந்தத் தேர்தலையும் வெற்றிகரமாக நடத்தி ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்றவர் ஒரு படிக்காத தமிழர் என்பதை நினைக்கையில் அவரது பெருமையும் திறமையும் நன்கு விளங்கும்.

அவர் ஆட்சியிலே பல குறைகள் இருக்கலாம். என்றாலும் தனிப்பட்ட முறையில் அவர் மீது ஏதாவது குறையுண்டா? என்று அங்கு சென்றிருக்கையில் பலரையும் விசாரித்தேன். ஒருவராவது அவர் மீது எவ்வித குறையும் கூறவில்லை. முன்னர் தமக்கு சில சந்தேகமிருந்ததாயும் அது இப்போது அடியோடு தீர்ந்துவிட்டதாயும், காமராஜர் தன்னலமற்ற தலைவர்தானென்றும் ஒரு நண்பர் கூறினர்.

* * *

சமீபத்தில் மகாபலிபுரத்துக்கு இலங்கை பத்திரிகையாளருடன் சென்றிருந்தேனல்லவா? அங்கு கடற்கரையிலே அழகான சூழ்நிலையில், முதல்தரமான அரசாங்க "ரெஸ்ட் ஹவுஸ்" கட்டப்பட்டுள்ளது. அதற்கு அஸ்திவாரமிட்டவரும், அதை இரண்டு வருடம் கழித்து திறந்துவைத்தவரும் சென்னை முதல்மந்திரியான காமராஜரே. அஸ்திவாரக்கல்லில், அவர் பெயர் "காமராஜ நாடார்" என்று உள்ளது. பின்னர் திறப்பு விழா கல்லிலே, "திரு. காமராஜ்" என்றே குறிப்பிடப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

# அணுசோதனை எதிர்ப்பு இயக்கம்

## கையெழுத்துக்கள் திரட்ட தீவிர முயற்சி

கிளிநொச்சி, வெள்ளி

அணு ஆயுத பரிசோதனைகளை தடை செய்யுமாறு வல்லரசுகளைக் கோரிக் கையொப்பம் சேர்க்கும் இயக்கத்தை இலங்கையில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம் ஆரம்பித்துள்ளது. பத்துலட்சம் கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதுபற்றிய புதுடில்லி ஆலோசனைக் கூட்டத்தில் இராஜகுமாரி அமிர்தகௌர், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயன், திரு. ஜி. இராமச்சந்திரன், திரு. சி. டி. தேஷ்முக், திருமதி துர்க்காபாய் தேஷ்முக், விஜயலட்சுமி பண்டிட், திரு. ஹிருதயநாத் குன்ஸ்ரு எம். பி., பிராங்க் அந்தோனி எம். பி. மற்றும் பலர் இக்குழுவில் பங்குபற்றினர். அமெரிக்காவில் முன்பு "இந்தியா லீக்" தலைவராக இருந்த திரு. ஜே. ஜே. சிங் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

அணுஆயுத பரிசோதனைகளைத் தடை செய்ய வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்ட அனைவரிடமிருந்தும் கையொப்பம் திரட்டுவதே இக்குழுவின் நோக்கமாகும். எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்பு கிடையாது. கையெழுத்து விடுபவர் தனிப்பட்ட முறையிலேயே ஒப்பமிடுவார். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இதே நோக்கத்துடன் பாடுபடும் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு அணு ஆயுத பரிசோதனைக்கு எதிராக ஒரு சர்வதேச ஐக்கிய அணியை அமைப்பதற்கு பாடுபடும். அணு ஆயுதப் பரிசோதனைகளின் அரசியல் அல்லது கெடுபிடுப் போர் அம்சங்களில் இக்குழு எவ்விதத்திலும் பங்கு கொள்ளாது. மனித குலத்தை சர்வநாச சக்தியிலிருந்து காப்பாற்றுவது ஒன்றே இதன் நோக்கம்.

இதேபோல் ஒவ்வொரு ஸ்தாபனமும், சங்கமும், தனிப்பட்ட நபர்களும் தயாரித்து பரப்பி முடிந்த அளவு அதிகமான கையொப்பங்களை சேர்த்து பொதுக் காரியதரிசி, அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம், காந்திநிலையம், உருத்திரபுரம் (தபால்) என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

## "என்னை மன்னித்து விடுங்கள்"

### —எதிரி

தங்காலை, வெள்ளி

'என்னை மன்னித்து விடுங்கள். கடுமையான கோபத்தினால் நான் இந்தக் குற்றத்தைச் செய்து விட்டேன்.' என்று தங்கலையைச் சேர்ந்த மரதனிஸ் ரத்நாயக்கா என்பவர் தங்காலை மாஜிஸ்டிரேட் திரு. சி. எஸ். டி. முனி மல்லி முன்னிலையில் தெரிவித்தார்.

டேவிட் ரத்னயக்கா என்ற அவரது சகோதரரைக்கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாக மரதெனிஸ் ரத்நாயக்கா மீது பொலிஸார் குற்றம்சாட்டி இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

விசாரணை முடிவில், மஜிஸ்டிரேட், மரதெனிஸ் ரத்நாயக்காவை 18 மாதம் பிணையில் விடுதலை செய்து முடிக்குரிய செலவாக ரூ. 100 செலுத்தும் படியும் உத்தரவிட்டார்.

## விளையாட்டுத் துறையில் நான்கு புதிய உலக சாதனைகள்

கடந்த மூன்று வார காலத்துக்குள் விளையாட்டுத்துறையில் நான்கு பதிய உலக சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 3-3-62ல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வீரரமணி செல்வி டிக்ஸி விலிஸ் பெண்களுக்கான அரைமைல் ஓட்டத்தை 2 நிமிஷம் 2.0 விநாடிகளிலும் 800 மீட்டர் ஓட்டத்தை 2 நிமிஷம் 1.2 விநாடிகளும் ஓடி இரண்டு புதிய உலக சாதனைகளை ஏற்படுத்தியிருக்கிறர்.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ரொபேட் லேயஸ் என்பவர் கடந்த 18-2-62ல் 100 யார் தூரத்தை 9.2 விநாடிகளில் ஓடி உலக சாதனையைச் சமப்படுத்தினர்.

கடந்த 27-1-62ல் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ் டேவிஸ (George-Davies) என்பவர் கம்பு ஊன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் பதினைந்து அடி பத்தும்நாலிலொரு அங்குலம் தாண்டி உயரத்தைத் தாண்டி உலக சாதனையை நிலை நாட்டினர்.

1962ல் இதுவரை எல்லாமாக ஆறு புதிய உலக சாதனைகள் விளையாட்டுத்துறையில் முறியடிக்கப்பட்டிருப்பதோடு ஒரு சாதனை சமப்படுத்தப்பட்டுமிருக்கிறது.

## வீட்டு வாடகை வசூல் இல்லை

கொழும்பு, வெள்ளி

1955-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் வீடு கட்டியுள்ள வருமானவரி செலுத்தும் அரசாங்க உத்தியோகஸ்தர்களிடமிருந்து வீட்டு வாடகையை தொடர்ந்தும் வசூலிப்பதில்லையென ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு அமைச்சர் தீர்மானம் செய்துள்ளார்.

1955 ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் வீடுகட்டியவர்கள் அவ்வாண்டு தொடக்கம் ஏழு வருடங்களுக்கு வீட்டுவாடகை செலுத்த வேண்டியதில்லை என அதே வருடத்தில் ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது. அடுத்த மாதத்துடன் இந்தத் தவணை முடிவடைகிறது.

வீடுகட்டியுள்ளவர்கள் மீது தொடர்ந்தும் வரிவசூல் செய்யாதிருப்பதற்கு 1954-ம் ஆண்டு தேசிய வீடமைப்புச் சட்டம், இலக்கம் 37-ல் வேண்டிய மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

## பொதுமக்களுக்கு அதிக வசதிகள்

### பார்லிமெண்ட் சபையில் ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்ட் கூட்டங்களுக்குச் சென்று, பார்லிமெண்டரி விவாதங்களை நேரில் கேட்க விரும்பும் பொதுமக்களுக்கும், எம். பி.க்களையும், அமைச்சர்களையும் அலுவல்கள்காரணமாகப்பிரதிநிதிகள் சபையில் காண விரும்பும் பொதுமக்களுக்கும் புதிய ஒழுங்குகளும், வசதிகளும் செய்யப்படவிருக்கின்றன.

பார்லிமெண்ட்கூட்டங்களைப் பாவையிடச் செல்வோருக்கு அங்கு ஒரு சிற்றுண்டிச்சாலை வசதியையும் ஏற்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

## இந்து மகளிர் கல்லூரியாக மாற்றக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

கரம்பொன் கிழக்கு சிவகுருநாத வித்தியாசாலையை "இந்து மகளிர் கல்லூரி"யாக மாற்றியமைக்குமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற நாரந்தனைக் கிராமச்சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரம்பொன் சென். செபஸ்டியன்சுல்லூரியில் அளவுக்கு மிஞ்சிய மாணவிகள் கல்வி பயிலுவதால் 'இந்து மகளிர் கல்லூரி' ஒன்றை நிறுவுதல் அவசியம் எனவும் இத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

தீர்மானம் பற்றிய மகஜர் ஒன்றை நாரந்தனைக் கிராம சபைத் தலைவர் திரு. க. கதிரித்தம்பி கல்வி மந்திரிச்கு அனுப்பி வைத்துள்ளார்.

## ஆலயத்திருப்பணி சபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு நாச்சிமார் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலய திருப்பணிச் சபைக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

கொழும்புக் கிளை ஸ்தாபனம் சார்பாக நடந்த இக்கூட்டத்தின்போது மேற்படி ஆலய திருப்பணி சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்கள் ஆராயப்பட்டன.

திருப்பணிநிதிக்காககொழும்பில் சினிமாக்காட்சி ஒன்றை நடத்துவதெனவும் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தை இம்மாதம் 26-ந் திகதி சிறப்பாக நடத்த வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

## பணிசுக்கு பதில் பிஸ்கட்

அமபகமுவா, வெள்ளி

மத்தியான இலவச போசனமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் பணிசுக்குப் பதில் இனிப்புச்சேர்ந்த பிஸ்கட்டுகள் அமபகமுவா அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு வாரத்துக்குத் தேவையான பிஸ்கட்டுகள் ஒவ்வொரு ஞாற்றுக் கிழமையும் பள்ளிக்கூடத்துக்கு வழங்கப்பட்டு வாரம் முழுவதும் மாணவர்களுக்கு விநியோகிக்கப் படுகிறது.

வார முடிவு நாட்களில் வழங்கப்படும் பிஸ்கட்டுகள் பதங்கெட்டுப் போய்விடுகின்றன எனச் சில பெற்றோர்கள் முறையிட்டுள்ளன

## புலோலியில் சிங்கள வகுப்பு

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி இந்து ஆங்கிலக் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன் தினம் மாலை சிங்களப் பாட வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தம்பசெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். கணபதிப்பிள்ளையால் தொடரப்பட்ட இப் பாட வகுப்புகளை மாலை வேளைகளில் நடாத்த "வித்தியாதிபதி அனுமதியளித்துள்ளார் என கூறப்படுகிறது.

## அல்ஜீரியாவில் 20 பேர் பலி

அல்ஜியர்ஸ், மார்ச் 9

நேற்று அல்ஜீரியாவில் ஏற்பட்ட சம்பவங்களில் 20 பேர் மாண்டனர். 58 பேர் காயமடைந்தனர்.

# பென்ஷன் கிடைக்காத விதவைகள் போர்க்கோலம்

## சங்கம் அமைக்க முயற்சி

கொழும்பு, வெள்ளி

விதைவகளுக்குப் பென்ஷன் வழங்குவதில் அதிகத் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பெருந்தொகையான விதவைகள் ஒன்று கூடி பழைய 'செகரட்டேரியட்' கட்டடத்திலுள்ள பென்ஷன்காரியாலயத்துச்குச் சென்று முறையிடவிருக்கின்றனர்.

விதவைகள் சங்கம் ஒன்றை ஏற்படுத்திப் பிரதான நகரங்களில் சங்கக் கிளைகளையும் நிறுவ விதவைகள் ஏற்பாடு செய்து வருகிறர்கள். டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், விகிதர்கள் அப்போதிக்கரிகளின் மனைவிமாராகவிருந்து விதைவைகளாகியுள்ளவர்களே விதவைகள் சங்கம் நிறுவுவதில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறர்கள்.

வீட்டுக்கு வீடு சென்று விதவைகளின் எண்ணுக்கணக்கை எடுத்து வருவதாகவும் இதுமுடிந்ததும் விதவைகள் சங்கத்தின் ஆரம்ப கூட்டம் கூட்டப்படும் எனவும் தெரிகிறது.

கணவன் இறந்து ஆறு மாதங்கள் சென்றபின்பும் விதவைகளுக்குப் பென்ஷன் கிடைப்பதில்லை எனத் தெரிகிறது. விதவைகளும் அவர்களது பிள்ளைகளும் வருவாய் இன்றி நீடித்த காலம் ஜீவனம் நடத்த முடியாதிருக்கின்றனர்.

## இளம்பிள்ளை வாதம் குறைந்து வருகிறது

கொழும்பு, வெள்ளி

இளம்பிள்ளைகள் வாத நோய் படிப்படியாக குறைந்து வருவதாக சுகாதார இலாகாவின் அதிகாரியொருவர் தொிவித்தார். இளம்பிள்ளை வாதம் கண்டதாக சந்தேகிக்கப்பட்ட சுமார் 88 பேருக்கு, கொழும்பு குழந்தைகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இவர்களில் 13 பேர்மட்டுமே இளம்பிள்ளைவாத நோயாளர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தநோய் கண்டதாக சந்தேகிக்கப்பட்ட எவரும் கொழும்புக்கு நேற்று கொண்டுவரப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

## சைவமாணவர் மன்றம்

உரும்பிராய், வெள்ளி

உரும்பிராய் இந்துக் கல்லூரி சைவமாணவர் மன்ற கூட்டம் ஆசிரியர் திரு. ச. தே. குணரத்தின தலைமையில் கல்லூரிமண்டபத்தில் கூடியது.

கூட்டத்தில் நடப்புவருட உத்தியோகத்தர்களகப் பின் வருவோர தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் தி. ஞானசேகரஜயர். உபதலைவர் செ. சுந்தரலிங்கம். காரியதரசி ச. ஏகாம்பரநாதன் உப காரியதரசி வ. தம்பிநாதன் தனாதிகாரி ந. சச்சிதானந்தன். உப தனாதிகாரி கி. நாகராசா.

## நியூராஜா வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளை நியூராஜாக் கோஷ்டிக்கும் அம்பனை ஆனந்த கோஷ்டிக்குமிடையே நியூராஜா விளையாட்டுத் திடலில் நடைபெற்ற ஒரு சினேகபூர்வமான கிரிக்கட்போட்டியில் முதல் ஆட்டத்தில் 32 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்தில் 36 ஓட்டங்களும் பெற்ற ஆனந்தாக் கோஸ்டியை முதல் ஆட்டத்தில்மாத்திரம் 82 ஓட்டங்களை ஓடி இரண்டாவது ஆட்டத்தை ஆடமலேயே இனிங்ஸாலும் 14 ஓட்டங்களாலும் நியூராஜா அமோக வெற்றியீட்டியது.

## சுகாதார இலாகா புதிய வெளியீடு

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் சுகாதார அபிவிருத்தி பற்றி சுகாதார இலாகா 'லக்சிறி' என்ற புதிய பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. பதினறு பக்கங்களைக் கொண்ட இப் புதிய வெளியீடு பல வெளி நாடுகளுக்கும் அனுப்பப் படும் எனத் தெரிகிறது.

## கட்சி சார்பின்றி வெற்றி பெற்ற ஜனநாயகவாதி

விஜயவாடா, மார்ச் 9

கட்சி இல்லாத ஆடம்பரங்களற்ற ஜனநாயக அமைப்பை லட்சியமாகக் கொண்டு தேர்தலில் போட்டியிட்ட திரு. பாலோஜி என்பவர் உத்திர பிரதேச சட்டசபைக்கு ஆக்ரா நகரத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆந்திராவைச் சேந்த திரு. கோரா என்பவரின் காரியாலயத்திலிருந்து வெளியான ஒரு துண்டு பிரசுரம் இத்தகவலை அளித்தது. திரு. பாலாஜிக்காக தேர்தல் பிரசாரம் நடத்தினர். 100 நாள் பாதயாத்திரை நடத்தி, வழிநெடுக கட்சியற்ற ஜனநாயகத்தின் உயர்ந்த அம்சங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னர் புதுடில்லியில பிரதமர் மந்திரி நேருவையும் இது சம்பந்தமாக சந்தித்துப பேசினர்

சட்டசபைக்கு தேர்ந்தேடுக்கப்பட்டால் மாதம் ரூ. 100 தான் சம்பளம் வாங்குவேன், 3- வகுப்பில் தான் பிரயாணம் செய்வேன். எந்தக் கட்சியுடனும் சேராது கட்சியற்ற ஜனநாயக அமைப்புக்காக பாடுபடுவேன் என்று வாக்காளர்கள் மத்தியில் கூறி வெற்றி பெற்றிருக்கும் முதல் எம். எல். ஏ. இவர்தான்.

## சிவராத்திரி

புங்குடுதீவு, வெள்ளி

சப்ததீவு இந்துமகாசபா சபாவினர் இவ்வருடம் எடுத்துக்கொண்ட முன் ஏற்பாட்டின் படி சப்ததீவுகளில் உள்ள சகல சைவ ஆலயங்களிலும் மகாசிவராத்திரி வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

## உப்பு ரூத்தல் 40 சதம்!

மக்கோனு, வெள்ளி

இங்கு உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று நாட்களாக மக்கோனு பஜாரில் உப்பு கிடைப்பது பெரிய அபூர்வமாகயிருந்து வருகிறது. சில வியாபாரிகள் உப்பு ஒரு ரூத்தல் 35, 40 சதத்திற்கு விற்பனை செய்கின்றனர்.

கடந்த மூன்று மாத காலமாக பழுப்புச் சீனிக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## கிளித்தட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம்- சிவியாதெரு சனசமூக நிலையம், யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களுக் கிடையில் "கிளித்தட்டுப் போட்டி" நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

இச் சுற்றுப் போட்டிக்கான முதல் விளையாட்டு இம் மாதம் 11-ம் திகதி மாலை காந்திநிலைய விளையாட்டு மைதானத்தில் நிகழ இருக்கின்றது. இ போட்டியில் கோண்டாவில் சனசமூக நிலையமும், சுவிபுர சனசமூக நிலையமும் கலந்து கொள்கின்றன.

# மதுரோயாத்தி[illegible] விவசாயிகளின் இன்னல்கள் பற்றி மகஜர்

## எம். பி யிடம் சமர்ப்பிக்கப்பட்டது

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பின் வடபகுதியைச் சேர்ந்த சித்தாண்டி பகுதியில் மதுரோயாத் திட்டத்தின்கீழ் குடியேற்றப்பட்ட விவசாயிகள் கடந்த மூன்று வருடமாக பல இன்னல்களை அனுபவித்துவருகிருர்கள்.

இதுசம்பந்தமாக சித்தாண்டி முற்போக்கு இளைஞர் கழகத்தினர், நீண்டதோர் மகஜரொன்றை மட்டக்களப்பு எம். பி. திரு. இராஜதுரையிடம் ஒப்படைத்துள்ளனர்.

"மதுரோயா குடியேற்றத் திட்டத்தின்கீழ் 1957-ம் ஆண்டு சில ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட்டது. அதோடு காட்டு நிலத்தைவெட்டி சீர்படுத்துவதற்கு நிதியுதவி கொடுப்பதாகவும் அரசாங்கம் உறுதியளித்தது. 306 விவசாயக் குடும்பங்கள் அரசாங்கத்தை [illegible], மற்றவர்களிடம் க[illegible] காடுவெட்டி நிலம் திருத்தினர்.

உறுதியளிக்கப்பட்டபடி, நிதி, விதை, நீர்ப்பசன [illegible] இவர்களுக்குக் கிடைக்கவில்லை. கைகளுக்கு கிட்டியது வாய்க்கெட்டாத நிலையில் இவர்களுக்கு பெருநஷ்டம் ஏற்பட்டது.

கடன் தொல்லை ஒருபக்கமும், மறுபக்கம் வறுமையும் இவர்களைத் துன்புறுத்தியது. குடியேற்றப்பட்ட 306 குடும்பங்களில் பத்துக் குடும்பங்களுக்கு மட்டும் வீடு கட்டுவதற்காக தலா 1000 ரூபாய் வழங்கப்பட்டது. மிகுந்த குடும்பங்களுக்கு இப்பணம் கூட வழங்கப்படவில்லை" என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

மட்டக்களப்பில்

# விவசாய விஸ்தரிப்பு அலுவலகத் திறப்புவிழா

மட்டக்களப்பு, வெள்ளி

"மட்டக்களப்புப் பகுதியில் விவசாயத்துறையில் ஆர்வம் மிக்கவர்கள் அதிகம்பேர் உள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கொடுப்பதற்கு ஓர் நிரந்தர அலுவலகம் இல்லாதது ஓர் பெருங் குறையாக இருந்தது. இன்றோடு அக்குறை நீங்கிவிட்டது. விவசாய ஆலோசனை பெறவிரும்புபவர்கள் அனைவரும் இங்கு வந்து தங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைப் பெறமுடியும்."

மட்டக்களப்பு விவசாய விஸ்தரிப்பு அலுவலக புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. ஆர். ஈ. பொன்னையா மேற்கண்டவாறு கூறினர்.

சுமார் 25,000 ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட இப்புதிய கட்டிடத்தை, சம்பிரதாய முறைப்படி பொங்கவிட்டு, பூரண கும்பம் வைத்து, குத்துவிளக்கேற்றி, திரு. ஆர். ஈ. பொன்னையா திறந்துவைத்தார். திறப்பு விழா ஞாபகார்த்தமாக, மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. ஆர். ஈ. பொன்னையா, விவசாயப் போதனசிரியர் திரு. ஏ. பேரின்பநாயகம், மாவட்ட வன பரிபாலன அதிகாரி திரு. சண்முகம்பிள்ளை ஆகியோரால் பலவகையான மாங்கன்றுகள் நாட்டப்பட்டன.

விவசாயப் போதனசிரியர் திரு. ஏ. பேரின்பநாயகம், விவசாயப் போதன ஆசிரியை செல்வி ரோஸ் மேரி, உணவு உற்பத்தி உத்தியோகஸ்தர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், ஆகியோர் திறப்பு விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

---

# வள்ளுவன் வாசிகசாலை

மட்டக்களப்பு, வெள்ளி

"கிராமப் புறங்களில் வாழும் மக்கள் பொது அறிவு அற்றவர்களாக வாழ்கிருர்கள். பல பத்திரிகைகளை அடிக்கடி படிப்பதன் மூலமே நாம் நமது நாட்டைப்பற்றியும் மற்றையநாட்டைபற்றியும் அறிந்துகொள்ள முடியும்."

செங்கடிலயில்புதிதாக உருவாக்கப்பட்ட வாசிகசாலையைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்துப் பேசுகையில் கல்குடா எம். பி. திரு. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர்.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் புதிதாக உருவாக்கப் பட்ட இவ் வாசிகசாலைக்கு "வள்ளுவன் வாசிகசாலை"எனப் பெயர் சூட்டப்பட்டது.

---

# மேலும் 40 பாடசாலைகள்

கொழும்பு, வெள்ளி

கல்வி அமைச்சர் திரு. ஜனுபதியுதீன் மாமூத் விடுத்துள்ள 'கெஜட்' அறிவித்தல் ஒன்றின்படி இவ்வாண்டு ஏப்ரல் 1 ம் திகதி தொடக்கம் மேலும் 40 பள்ளிக்கூடங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்.

---

# வீடு கிடைக்கவில்லை என தற்கொலைபுரிந்தார்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீட்டுப் பிரச்சினையால் 30 வயதுள்ள வி. சுந்தரம் என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணையின் போது, சுந்ததிரத்தின் விதவை இலட்சுமி என்பவர் பின்வருமாறு தெரிவித்தார்:

நாங்கள் விவாகமாகி ஐந்து வருடமாகின்றது. எங்களுக்கு ஒரு குழந்தை உண்டு. எனது பெற்ரோர் கொழும்பில் வசிக்கிறார்கள். அண்மையில் தான் நான் யாழ்ப்பாணத்தில் வசிக்க வந்தேன். இறந்த எனது கணவர் தனியாக வாடகைக்கு ஒரு வீடு எடுப்பதில் மிகுந்த சிரமப்பட்டார். ஆனல் வீடு எங்களுக்குக் கிடைக்கவில்லை.

இதனல் நாங்கள் ஒரு வீட்டிலிருந்து மற்ற வீட்டுக்குமாறி மாறிக் குடி புகுந்தோம். அண்மையில், யாழ்ப்பாணத்திலிருந்து நாங்கள் தெல்லிப்பளையில் ஒரு வீடு எடுத்து அங்கு வசித்து வந்தோம். ஆனல் எங்களுக்கு அந்த வீடு அவ்வளவாக திருப்தியாக [illegible]யில் இருக்கவில்லை. இதனல் மீண்டும் யாழ்ப்பாண நகரத்துக்கு வந்தோம். இங்கு வீடு நாங்கள் நினைத்ததுபோல் கிடைக்கவில்லை. கணவர் எனது அண்ணனுக்கு, என்னை கொழும்புக்கு அழைத்துச் செல்லும்படியும் இங்கு வீடு கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறதென்றும் ஒரு கடிதம் எழுதினர்.

என்னை அழைத்துக்கொண்டு செல்ல அண்ணர் இங்கு வந்தார். தெல்லிப்பழையிலுள்ள வீட்டில் இருந்த சில சாமான்களை எடுத்து வருவதற்காக நானும் எனது அண்ணனும் அங்கு சென்ரோம். அங்கிருந்து திரும்பிவந்து பார்த்தசமயம் எனது கணவர் இறந்துகிடந்ததைக் கண்டேன்."

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

# மாடியிலிருந்து விழுந்ததால் மரணமடைந்தார்

மட்டக்களப்பு, வெள்ளி

மாடியில் இருந்து விழுந்ததால் ஓர் தச்சுத் தொழிலாளி மரணமடைந்த பரிதாபகரமான சம்பவமொன்று சில தினங்களுக்கு முன் இங்கு நடைபெற்றது.

புளியடிக் குடாவைச் சேர்ந்த திரு. பேதுரு அந்தோனி என்பவர், செசன்.திரேசா கொன்வன்டின் மேல்மாடியில் வேலை செய்து கொண்டிருந்தார். தனது வேலைகளை முடித்துக் கொண்டு தேநீர் குடிப்பதற்காக அவர் மாடிப்படியில் இருந்து இறங்கி வரும்போது கால்தவறி விழுந்தால் அவரது தலைமண்டை நொருங்கியது அவசர அவசரமாக திரு. பேதுரு அந்தோனி மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டார். சில மணி நேரங்களுக்குள்ளாக அவர் மரணமுற்றுர் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. இளையதம்பி மரண விசாரணை நடத்தினர்.

---

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பாட்டு

— சி. செல்லத்துரை —

இராகம்: நாட்டை தாளம்: ஆதி

பல்லவி

வந்தனை செய்திடுவோம், சங்கீத
வள்ளல் தியாகராஜ சுவாமியை அநுதினம் — வந்

அநுபல்லவி

விந்தை மிகுந்த ராமன் விரும்பிய சீலனை
விண்ணவன் நாரத அன்னவின் லோலனை — வந்

சரணம்

சங்கீத ஞான சாதனை வளர்ந்திட
தாள சுருதி ராக பாவஞ் சிறந்திட
மங்காத நாத மன்னராய் மலர்ந்திட
மாநிலமீது மாந்தர் மேலும் விதந்திட — வந்

தெலுங்கிசைப் பாடலின் செம்பொருள் தெரிந்தேத்தி
தியாகராஜர் புகழ் செந்தமிழிலே சாத்தி
நலங்கொள் கலைஞர் பாடும் நற்றமிழ்ப் பாடல் போற்றி
நாநிலம் 'ஐயர்' நலம் நன்ருயறியச் சாற்றி — வந்

★வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற தியாகராஜ சுவாமிகளின் உற்சவத்தை முன்னிட்டு இப் பாடல் இயற்றப்பட்டது.

---

# பனிச்சங்கேணி துறைக்கு இயந்திரப்படகு சேவை

## மிக விரைவில் ஆரம்பமாகும

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பின்வடபகுதியில் உள்ளதும் ஆயிரக்கணக்கான விவசாயிகளின் போக்குவரத்துக்குதவுவதுமான, பனிச்சங்கேணி துறையின் படகுச் சேவை மிகமோசமான நிலையில் அமைந்துள்ளது.

பனிச்சங்கேணி துறையின் படகுச்சேவையின் பிற்போக்கான நிலையினை நேரில் சென்று பார்வையிட்ட கல்குடா எம். பி. திரு. மாணிக்கவாசகர், இதுசம்பந்தமாக பொது மராமத்து இலாகாவுடன் தொடர்புகொண்டதின் பேரில் மிக விரைவில் இத்துறைக்கு இயந்திர படகுசேவை அமைக்கப்படவிருக்கிறது.

இயந்திர படகு சேவை ஆரம்பிக்கப்பட்டால், இப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு சிறந்த போக்குவரத்துவசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

# இராமகிருஷ்ண ஜயந்தி விசேஷ பூசை

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண சங்க விடுதி, குருதேவர் ஆலயத்தில் சுவாமி இராமகிருஷ்ணரின் 127-வது ஜயந்தி விழாவை முன்னிட்டு விசேஷ ஆராதனைகளும், பூசைகளும் நடைபெற்றன. இராமகிருஷ்ண சங்க விடுதி மாணவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். விழா ஏற்பாடுகள் அனைத்தும் வண. சுவாமி நடராஜ நந்தஜீ தலைமையில் நடைபெற்றன.

---

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

---


# ஏல விற்பனை

1962-ம் ஆண்டு மார்ச்மாதம் 14-ந்திகதி புதன்கிழமை காலை 9-30 க்கு வாக்கர்ஸ் கொள்ளுப்பிட்டி (கரேஜுக்கு பின் புறம்) மோட்டார் உறுப்புகள், துணைக்கருவிகள் ஏலத்தில் விற்கப்படும். விற்பனை முடிந்தும் பணம் செலுத்தி உடனடியாக பொருட்களை எடுத்துச்செல்லவேண்டும்

வேண்டுகோளின் பேரில் பட்டியல் கொடுக்கப்படும்.

இம்மாதம் 12, 13-ம் திகதிகளில் காலை 10 மணியிலிருந்து 12 மணிவரையும் பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணி வரையும் பார்வையிடலாம்.



மிகத் திறமையான

# பவர்ஸ் உரங்கள்

கிரிமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும் லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

# ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த [illegible] கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 10-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 800 நாதஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பி. நாகமுத்து - பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 பி. சந்திரசேகரம் - பாட்டு, 10-15 நாட்டிய இசை.

ஞாயிறு 11-3 62

காலை 6 45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 தேர்ந்தஇசை, 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை - குரல், 6-10 குரல்வகை, 6-30 பி. வெள்ளைச்சாமி-முகவீணை

இரவு 7-00 டென்மார்க் தேசியதின நிகழ்ச்சி, 7-30 சிரோனமணி பொன்னுத்துரை - பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'சிலை தந்த பரிசு, - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

சனி 10-3-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சேத்தூர் கே. சுந்தரேசபட்டர்-வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 சேத்தூர் கே. சுந்தரேசபட்டர்-வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'அணையா விளக்கு'- நாடகம், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 11-3-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இசைக் கோவை, 8-15 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள், 8-30 சீதாராம கிருஷ்ணன் - பாட்டு, 9-00 சித்தூர் ஜி. வேங்கடேசன் - புல்லாங்குழல், 9-30 நாதஸ்வரம், 9-45 ராமநாதபுரம் - கிருஷ்ணன் - பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-40 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-15 சர்வகலாசாலைக்கான விவாதப் போட்டி, 2-30 பெண்ணுலகம், 2-50 மெல்லிசை, 3-00 சென்னை அஞ்சல்.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 எம்.எல். வசந்தகுமாரி - பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-30 மணிமாலை, 10-00 மெல்லிசை அரங்கம்.

---

## நேபாளம்

காட்மாண்ட், மார்ச் 9

நேபாளத்தில் 6 மாதத்திற்கு அவசரக்கட்டுப்பாட்டுச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய ஆபிரிக்க நாடுகளின் நிதானபோக்கு

### திரு அட்லாய் ஸ்டீவன்ஸன் பாராட்டு

நியுயோர்க், மார்ச் 8

ஐ. நா. வில் ஆபிரிக்க நாடுகளும், ஆசிய நாடுகளும் காட்டும் நிதானப்போக்கை ஐ. நா. விலுள்ள நிரந்தர யு. எஸ் பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் பாராட்டினார். இந்த நாடுகளைப்பற்றி பிரிட்டன், பிரான்ஸ், போர்ச்சுக்கல் முதலிய நாடுகள் தெரிவித்துள்ள கண்டனத்தை திரு. ஸ்டீவன்ஸன் நிராகரித்தார்.

ஆபிரிக்க, ஆசிய நாடுகள் கோஷ்டி இருப்பதாகச் சொல்லிக்கொண்டு, அவற்றைத்தாக்குவது நியாயமல்லவென்று திரு. ஸ்டீவன்ஸன் கூறினார்.

## ஆஸ்பத்திரியிலிருந்து மறைந்த நோயாளி

### மாதகல் சந்தியில் காணப்பட்டார்

தெல்லிப்பழை, வெள்ளி

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி யொருவர் நள்ளிரவில் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி மாதகல் சந்தியில் வைத்து உறவினரிடம் சேர்க்கிய சம்பவம் காங்கேசன் துறையில் நிகழ்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மயிலிட்டி தெற்கு வாசியான சுப்பிரமணியம் என்பவரின் மனைவி சங்கம்மா காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். செவ்வாய்க் கிழமை மாலை உறவினர் அந்த நோயாளியிடம் வந்து போயினர். அடுத்த நாள் காலை அங்கு போன உறவினரிடம் நோயாளியைக் காணவில்லை என்ற தகவலை அங்குள்ளவர்கள் அறிவித்தனர். உடனடியாக தெரிவித்தார்.

உறவினர்கள் பல கார்களில் தேடிச் செல்கையில் இந்த நோயாளி மாதகல் சந்தியில் நிற்கக் கண்டுபிடித்தனர். அவர் காரில் வீடுகொண்டு வரப்பட்டார்.

## சவச்சாலைக்கு குளிர் சாதனம் வேண்டும்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் உள்ள சவச்சாலையில் குளிர் சாதனங்கள் நிறுவப்படவேண்டுமென, மட்டக்களப்பு திடீர் மரணவிசாரணை அதிகாரி தி. வி. இளையதம்பி ஆஸ்பத்திரி அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

---

## கிரிக்கட்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுதுமலை விவேகானந்தா கிளப் "பி" பிரிவினருக்கும் கொட்டடி யாழ்றேஞ்செஸ் கிளப் "பி" பிரிவினருக்கும் நடந்த போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.



## இளைஞர் விவசாய கழகம்

இணுவில், வெள்ளி

இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக் கழகக் கூட்டம் தலைவர் சி. சண்முகலிங்கம் தலைமையில் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையிற் கூடியது.

கூட்டத்தில் நடப்புவருட நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவ: செ. இலகுநாதன், உப தலைவர்: செ. சிவகுருநாதன், காரியதரிசி: ந. சச்சிதானந்தன், உப காரியதரிசி: மு. இராசலிங்கம், தனதிகாரி: தா. குமாரகுலசிங்கம்.

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வருகிற 16-ம் திகதி தொண்டமனாறு செல்லச் சன்னதி முருகப் பெருமான் முன்னிலையில் திரு. எஸ். வி. பரமலிங்கத்தின் இசை அரங்கேற்றம் நடைபெறும். இசைப்புலவர் திரு. என். சண்முகரத்தினம் தலைமை வகிப்பார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

தேசியஆஸ்பத்திரி சுவீப்பின் 170-வது இழுப்பு முடிவுகள் வருமாறு:-

**முதலாவது பரிசு:**
01 G 0804 ரூ 71,575,00

**இரண்டாவது பரிசு:**
01 H 0117 35,787,50

**மூன்ருவது பரிசு:**
12 M 0425 17,893,75

சீட்டு ஒன்றுக்கு 715-75 பரிசாகப் பெறும் ஏனைய 25 சீட்டுக்களின் இலக்கங்கள்:

| | |
|---|---|
| 15 Q 0498 | 08 D 0491 |
| 07 O 0959 | 19 B 0228 |
| 13 W 0791 | 08 Z 0031 |
| 02 Y 0045 | 18 O 0957 |
| 19 R 0569 | 04 T 0066 |
| 16 N 0951 | 16 N 0692 |
| 06 L 0320 | 12 R 0809 |
| 18 L 0371 | 16 E 0331 |
| 07 S 0352 | 05 W 0127 |
| 15 Q 0526 | 15 S 0655 |
| 10 A 0235 | 11 E 0249 |
| 13 V 0841 | 04 V 0133 |
| 14 M 0418 | |


3-வது வாரம்!

பிளாஸா கெப்பிட்டல் விஜயா
(வெள்ளவத்தை) (கொழும்பு) (மட்டக்களப்பு)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசன
நடித்த




இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

மையிலன் நவா விஜிதா
(கொழும்பு) (கும்பனித்தெரு) (மஸ்கேலியா)

தீவோலி சென்ட்ரல் ஜெமினி
(நுவரெலியா) (மாத்தளை) (ராகலை)

மனோகர், தேவிகா, சௌகார் ஜானகி, பக்கிரிசாமி
நடித்த

மாதவி

9-வது வாரம்!

கிங்ஸ்லி வெலிங்டன்
(கொழும்பு) (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,
நடித்த

பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். பி. சரோஜா
நடித்த

புதுமைப் பித்தன்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் திங்கள் மாலை4-15க்கும் செவ்வாய் மாலை 4-15, 6-30க்கும்

Goliath & the Dragon


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உலகசக்தியும் சிவசக்தியும்

"உலக சக்திகள் அனைத்தையும் ஆட்டிவைப்பது சிவசக்தியே. பிற நாட்டு மொழி, மத, சமய தத்துவங்களில் காணுத ஒரு சிறந்த தத்துவத்தை எமக்கு அளித்துள்ளது எமது சைவ சமயம்"

இவ்வாறு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் "சிவசக்திதத்துவம்" என்னும்பொருளில் திருமதி மீனுட்சி பொன்னுத்துரை, பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். ஆரம்பத்தில் திரு. வி. அண்ணுமலை கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பித்துவைத்தார். வரவேற்புரை வழங்கிய செயலாளர் ச. சுப்பையா நம் முன்னேர் தொன்றுதொட்டு கடைப்பிடித்த வழிபாட்டு முறைகளை இன்று நாம் ஓரளவையாவது செயல்பட்டு வரல் வேண்டும். சிவராத்திரிபோன்ற சமய விழாக்களைத் தவருது ஒற்றுமையுடன் ஒழுங்குறச் செய்யவேண்டியதே நாம் சமயத்திற்கும் மொழிக்கும் ஆற்றும் அருந்தொண்டெனக் குறிப்பிட்டார். சிவராத்திரி மகிமையையும் இவ்விழாவின் தன்மையைக் குறித்தும்கூறப்படும் வேடன்கதை, அடிமுடிகாண அமரர் செய்த சகாசம் போன்றவைகளைக்கூறி விழாவை ஆரபித்துவைத்தார் திரு. மு. வைரவப்பிள்ளை.

இவ்வுலகிலுள்ள அரச நீதி மக்கள் நீதிபோன்ற நீதிகளுள் தலையான நீதியாக விளங்கும் தெய்வ நீதியின் சிறப்பைஉதாரணக்கதையுடன் கதாகாலட்சேபமாக மதுரை ஆதீன முத்தமிழ்மணி ஸ்ரீமத் சி. சி. எஸ். சணிபாகவதர் எடுத்துக் கூறினர்.

மதுரை குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் பரமாச்சாரிகள் சுவாமிகளின் விழா ஆசிச்செய்தியும் வாசிக்கப்பட்டது.


அந்தியகால சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட்

330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

நல்லூர் வாசியும் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய வருமான திருவாளர் C. ஆதிரெத்தினம் அவர்கள் ஷை சங்கத்தின் கௌரவ மாவட்ட அமைப்பாளராக (Hony. District Organizer) நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

R. சோமலிங்கம், காரியதரிசி.

விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் கொக்குவிலுக்குப் போகும் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கிருக்கிறது. வடக்கெல்லை தெரு. பரப்பு ரூபா 5500.

C/O எலெக்ரோஸ்,
திருநெல்வேலி


[redacted]

# வீட்டுவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையைக் கொண்டுவந்தனர்.

இந்தப்பிரேரணையைச் சபையில் விவாதிக்க அனுமதியளிக்கமுடியாதென மேயர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து சில அங்கத்தினர் அப்பிரேரணையைச் சபையில் விவாதிக்க அனுமதி யளிக்கவேண்டுமென ஏககாலத்தில் வற்புறுத்தினர். இதைத்தொடர்ந்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. கூட்டத்தை ஒத்திவைத்து மேயர் சபையைவிட்டு வெளியேறிச்சென்ருர். அங்கத்தவர்கள் சிலரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர்.

மேயர் வெளியேறிச் சென்றதையடுத்து முன்னுள் மேயர் திரு. டி. எஸ துரைராஜா கூட்டத்திற்குத் தலைமைவகித்து நடத்துமாறு டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தின் பெயரையும் திரு. பி. எம். ஜோன் உதவி மேயர் திரு. ஏ துரைராஜசிங்கத்தின் பெயரையும் பிரேரித்தனரெனினும் அவர்கள் எவரும் அவ்வாறு செய்யாதிருந்தனர்.

இங்கிலையில் சபையில் சமுகமளித்திருந்த மாநகரசபைக் கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்காவும், சபை லிகிதர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோரும் வெளியேறினர்.

இதன்பின் அங்கு எஞ்சியிருந்த உறுப்பினர்கள் ஒன்பது பேர் 45 நிமிஷநேர ஆலோசனையின்பின், மேற்குறிப்பிட்ட பிரேரணை உட்பட இரண்டு பிரேரணைகளை விவாதிப்பதற்காக சபையின் விசேஷ கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு மேயரைக்கேட்டுக்கொள்ளும் கடிதமொன்றை எழுதி ஒன்பதுபேரும் கைச்சாத்திட்டு அதைக் கமிஷனர்மூலம் அனுப்பிவைப்பதாகத் தெரிவித்துச்சென்றனர்.

திருவாளர்கள் டி. எஸ். துரைராஜா, ஏ. துரைராஜசிங்கம், என். டி. செல்லத்துரை, பி. எஸ் சோமசுந்தரம், என். தேவபாலசுந்தரம், ஜே. எஸ். அழகையா, பி.எம். ஜோன், எஸ். இராசரத்தினம், டாக்டர் எஸ் ஏ. தருமலிங்கம் ஆகியோர் கூட்டாகக் கைச்சாத்திட்டு எழுதியிருக்கும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய பிரேரணை வருமாறு:-

"யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் அல்லாத பிரமுகர் ஒருவர் மாநகரசபை அலுவல்களில் தலையிட்டு, மாநகரசபைக்கு அளித்துவரும் உதவி வரவேற்கத்தக்கதாயில்லை."

## தி. மு. கழகத்தின்மீது திரு. அந்தோணிபிள்ளை கடும் தாக்கு

சென்னை, மார்ச் 9

"கடந்த பொதுத்தேர்தலில் தி. மு. கழகத்தினர் வீணை பொய் சுவரொட்டிகளை வைத்து மக்களை ஏமாற்றினர்கள்" என்று திரு. எஸ். சி. சி. அந்தோணிபிள்ளை இங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தி. மு. கழகத்தின தேர்தல் பித்தலாட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார்

துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த பொழுது அதைப் பற்றி நினைத்தும் பார்க்காத கழகம். "கூலி உயர்வு கேட்டார் அத்தான்; குண்டடிபட்டு செத்தார் அத்தான்" என்பது போன்றும் 4104 பேர் செத்தனர் என்பது போன்றும் சுவரொட்டிகளை ஒட்டி ஏமாற்றி வாக்குகள் பெற்றிருக்கிருர்கள் என்றும் தேர்தல் சமயத்தில் தொழிலாளர்கள் மத்தியில் தி. மு. கழகத்தினர் பொய் சொல்லி ஏமாற்றி வாக்குகள் பெற்றிருக்கிருர்கள் என்றும் திரு. அந்தோணிபிள்ளை கூறினர்.

## பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

லண்டன், மார்ச் 9

ஆபிரிக்க ஆசிய நாடுகளின் பிரதிநிதியாக பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா, நிரந்தர அங்கத்தினராக்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் கட்சியின் சர்வதேசவிவகார காரியதரிசி டேவிட் என்னல்ஸ் ஆலோசனை கூறியிருக்கிருர் அந்த கவுன்சிலில் உள்ள நிரந்தர மல்லாத அங்கத்தினர்களின் எண்ணிக்கை 6- லிருந்து 8- ஆக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

பேபியன் சர்வதேச பீரோ வெளியிட்டுள்ள "ஐ. நா. வுக்கு சோதனை" என்ற துண்டுப் பிரசுரத்தில் அவருடைய யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

## எருமை வெட்டியவர்களை பொலிசார் கைது செய்தனர்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு சுப்ரீம் கோர்ட்டுக்குப் பின்புறமாகவுள்ள வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் எருமைமாடுகள் வெட்டப்பட்டு உரிக்கப்படுவதை பொலிஸார் திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடித்தனர்.

தமது சாரங்களை மடித்துக் கட்டிக்கொண்டுநான்கு எருமை மாடுகளின் தோல் உரிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சில நபர்களைத் திடீர் பரிசோதனை செய்த பொலிஸ் கோஷ்டியினர் கைதுசெய்தனர்.

பொலிஸினர் குறிப்பிட்டவீட்டினுள் நுழைந்தபோது மூன்று எருமை மாடுகளின் தோல்கள் உரிக்கப்பட்டிருந்ததாம்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. 'நாடார்' என்ற சாதிப் பெயரையும் விட்டு விட்டார் அவர்.

'காமராஜர்' என்பதற்கு காமனை வென்றவர், என்று பொருள். சிவபெருமானுக்கு அவ்வித பெயருண்டு. விவாகம் கட்டாமல் பிரம்மச்சாரியாகவே வாழ்கின்ற சென்னை முதல் மந்திரிக்கு இப்பெயர் மிகப் பொருத்தமாகுமல்லவா!

## அமெரிக்காவில் புயலுக்கு 35 பேர் பலி

வாஷிங்டன், மார்ச் 9

அமெரிக்க கிழக்குக்கரைப் பகுதியில் இரண்டு நாட்களாக வீசிய பெரும் புயல் காரணமாக 35 பேர் இறந்தனர்.

பல வீடுகளும் ஆலயங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின.

சேதத்துக்குள்ளான வீடுகளையும் ஆலயங்களையும் திருப்பிக் கட்டுவதற்கு வகைசெய்யும் முறையில் 20 வருடத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடியதான கடனுதவி வழங்குமாறு அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி அறிவித்துள்ளார்.

## கப்பல் பிழந்தது

வாஷிங்டன், மார்ச் 9

அட்லாண்டில் வீசிய கடும் புயல்காரணமாக ஜெம் என்னும் லைபீரியக் கப்பல் இரண்டு துண்டுகளாகப் பிழந்தது.

## பர்மாவில் 64000 வீடுகள் தீக்கிரை

பர்மா, மார்ச் 9

பர்மாவில் ஒரு வீட்டில் தீப்பற்றியதைத் தொடர்ந்து 64000மூங்கில்வீடுகள் தீக்கிரையாகின.

சுமார் 60,000 மக்கள் இதனல் வீடிழந்தனர்.